UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
***ISSN: 2320-4842 (Print)*** ***ISSN: 3049-2688 (Online)***

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

**Published on 14, Oct-Dec 2025** **ISSN:2320-4842 (P) 3049-2688 (O)**

# கல்வெட்டுகள் காட்டும் எமனேஸ்வரம் வரலாறு

**வே. இராஜகுரு**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**இ. இனியன்**
உதவிப் பேராசிரியர், தொல்லியல் துறை, சமூக அறிவியல் புலம்
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை - 15

**ஆய்வுச் சுருக்கம்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் சோழர், பாண்டியர் வரலாற்றுக்கு ஆதாரமான பழமையான பல கோயில்கள் உள்ளன. எமனேஸ்வரத்தில் உள்ள சிவன் கோயிலில் சோழர், பாண்டியர் அடையாளத்துடன் இரு சிவன் சன்னதிகள் உள்ளன. இவற்றின் கட்டடக்கலை அமைப்பு, கல்வெட்டுகள் சொல்லும் தகவல்கள், பிற கோயில் கல்வெட்டுகளில் இவ்வூர் பற்றிய குறிப்புகள் ஆகிய தொல்லியல் தடயங்களைக் கொண்டு இப்பகுதியில் இருந்த வணிகர், வணிகம் சார்ந்தவர்கள் பற்றியும், இவ்வூருடன் சோழர், பாண்டியருக்கு இருந்த தொடர்பு பற்றியும் இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் இவ்வூர் பிற்காலச் சோழர் ஆட்சிக்காலத்தில் இருந்தே ஒரு வணிக மையமாக விளங்கி இருந்ததை அறிய முடிகிறது.

**முதன்மைச் சொற்கள்**

எமனேஸ்வரம், பாண்டியர், நகரத்தார், இயமனீஸ்வரம், தும்பிச்சி நாயக்கர், சோழர்

**அறிமுகம்**

இராமேஸ்வரத்தில் இருந்து மதுரை செல்லும் பெருவழிப்பாதை, இராமநாதபுரத்தில் இரண்டாகப் பிரிந்து வைகை ஆற்றின் வடக்கு மற்றும் தெற்காகச் செல்கிறது. வைகையின் வடக்கில் நயினார்கோயில், எமனேஸ்வரம் வழியாகச் செல்லும் பெருவழியில் பிற்காலச் சோழர், பிற்காலப் பாண்டியர் ஆட்சிக்காலத்தில் பல புதிய கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அருகில் வைகை ஆற்றின் வடக்கில் அமைந்துள்ளது எமனேஸ்வரம். கல்வெட்டுகளில் இவ்வூர் இயமனீஸ்வரம் எனப்படுகிறது. பரமக்குடியை விட பழமையான வரலாற்றுச் சான்றுகள் கொண்டதாகத் திகழும் இவ்வூரில் பொன்னால் பூண்முலை உமையாள் சமேத எமனேஸ்வரமுடையவர் எனும் ஒரு பழமையான சிவன் கோயில் உள்ளது. இங்கு வட்டவடிவ ஆவுடையுடன் இயமனீஸ்வரமுடையார், சதுரவடிவ ஆவுடையுடன் மல்லிகார்ஜுனேஸ்வரர் ஆகிய இரு சிவன் சன்னதிகளுடன், அம்மன்

ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

சன்னதியும் உள்ளன. பிரஸ்தரம் வரை கருங்கற்களாலும், அதன் மேற்பகுதி செங்கலாலும் கட்டப்பட்டுள்ள இயமனீஸ்வர முடையார் சன்னதி விமானத்தின் மேற்பகுதி புதுப்பிக்கப்பட்டிருந்தாலும், அதன் அதிட்டானப் பகுதி பழமையுடனும் கல்வெட்டுடனும் உள்ளது. சிறிய அளவிலான மல்லிகார்ஜுனேஸ்வரர் சன்னதி, செங்கலால் கட்டப்பட்டு முழுவதும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் இருந்த 3 கல்வெட்டுகள் இந்தியத்தொல்லியல் துறை யால் 1914இல் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**இயமனீஸ்வரமுடையார் சன்னதி**

இயமனீஸ்வரமுடையார் சன்னதியின் விமானம், மூன்றுதளங்களுடன் சதுரவடிவில் சுத்த நாகர விமானமாக அமைந்துள்ளது. விமானத்தின் அதிட்டானம் ஜகதி, முப் பட்டைக் குமுதம், பட்டிகை என பாதபந்த அதிட்டானமாக உள்ளது. பாத சுவரில் அரைத்தூண்கள், தேவகோட்டங்கள், புடிதம் ஆகியன அமைந்து அழகு சேர்க்கின்றன. கோட்டங்களில், தெற்கில் தட்சிணாமூர்த்தி யும், மேற்கில் லிங்கோத்பவரும், வடக்கில் பிரம்மனும் உள்ளனர்.

அம்மன் சன்னதியின் மேற்கு சுவரில் உள்ள கி.பி.1222ஆம் ஆண்டுக் கல்வெட்டில், சோணாடு கொண்டருளிய முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் ஆறாம் ஆட்சியாண்டில், பெரியநங்கை என்பவர், கொடிக்காலால் நீர்பாய்ந்து நெல் விளையும் நிலத்தை விலை கொண்டு வாங்கி இக்கோயில் இறைவனுக்குத் தானமளித்துள் ளார். இதில் கண்ணமநல்லூர், இந்திராபரண நல்லூர் ஆகிய ஊர்கள் குறிப்பிடப்படுகின் றன. கல்வெட்டு சிதைந்துள்ளது. கல்வெட்டில் குறிப்பிடப்படும் உடையார் ஸ்ரீமூலத்தான முடையார் என்பது இக்கோயில் இறைவன் பெயராகவும், கண்ணமநல்லூர் இவ்வூரின் பழைய பெயராகவும் இருக்கலாம். *பெரியநங்கை இந்திராபரணநல்லூரைச் சேர்ந்தவராக இருக்கலாம்*[1].

கோயில் அருகில் உள்ள கல்லில் இருந்த முதலாம் மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் (கி.பி.1268-1312) கல்வெட்டில், கேரளசிங்க வளநாட்டு மட்டியூர் சிவபுரியைச் சேர்ந்த ஓமழகியான் நாராயணனான குறி உடைய பாண்டியத் தேவர் குமாரக்குறுச்சியான கோதண்டராமநல்லூரில் காடனேரிக் கவலால் நீர்பாயும் பதினாறு சாண்கோல் புன்செய் நிலத்தை வாங்கி இக்கோயிலுக்கு தேவதான இறையிலியாகக் கொடுத்துள்ளார். இதில் தம்முதாயன், செம்பியன் விழுப்பரயன், திருநலூர்க் கிழவன், கிழவன் ஆழ்வானான அழகிய பாண்டியன் ஆகியோர் கையொப்ப மிட்டுள்ளனர். தரிசுநிலத்தினைச் சீர்ப்படுத்தி, பயிர் செய்வதற்குரிய வகையில் பண்படுத்தப் பட்ட நிலம், "வயக்கல்" எனப்படும். இக் கல்வெட்டில் ஸ்ரீவல்லப வயக்கல் என்ற நிலத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கோயில் ஆதிசண்டேஸ்வர நாயனார்க்கும், தானத்தாற்கும், குமாரக்குறுச்சியான கோதண்டராமநல்லூர் ஊரார் இசைவுடன் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது[2]. குமாரக் குறுச்சி எமனேஸ்வரத்தில் இருந்து 6 கி.மீ தொலைவில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ளது.

இயமனீஸ்வரமுடையார் சன்னதியின் மேற்கு அதிட்டானத்தில் உள்ள கி.பி.1567ஆம் ஆண்டுக் கல்வெட்டு, சம்மட்டி நாராயணனான தும்மசி நாயக்கர் குமாரர் சன்னணானா என்பவர், மதுரை மாடப் பெருங்குளத்து மதுரை நகரத்தாரில் ஆற்றூருடையர் மெய்நின்றார் எங்குமான செட்டியாருக்கு உரிமையாக கொடுத்த வடதலைச் செம்பி நாட்டு மாவிலங்கை என்ற ஊரை குடி நீங்கா தேவதானமாக இயமனீசுரமுடைய நாயினாற்கு விட்டுள்ள தைத் தெரிவிக்கிறது. இங்கு பயிர் விளைந்த

நிலத்துக்கு பெரும்படிக் கம்பாலே ஒரு 'மா' நில அளவுக்கு இருகலம் நெல் கோயிலுக்கு வழங்கவேண்டும் என ஆணையிடப்பட்டுள் ளது. இது மதுரையில் நாயக்க மன்னர்கள் ஆட்சி இருந்தபோது, பரமக்குடி பகுதியை ஆட்சி செய்த தும்பிச்சி நாயக்கரின் கல்வெட்டு ஆகும்[3].

திருப்புல்லாணி, ஆதிஜெகந்நாதப் பெருமாள் கோயில் இரண்டாம் கோபுர நுழைவு வாயிலின் வலது பக்கச் சுவரில் காணப்படும் கி.பி.1515ஆம் ஆண்டு சுந்தரத்தோளுடை யார் மகாவலி வாணாதராயர் கல்வெட்டு, நயினார் தெய்வச்சிலைப் பெருமாளுக்கு இறந்தகாலமெடுத்தான் சந்திக்கு அமுது செய்தருள திருவிடையாட்டமாக வடதலைச் செம்பி நாட்டு இயமணிசுரத்து மடைகழி ஏந்தலான குணப்பனேந்தல் என்ற ஊர் வழங்கப்பட்டதைத் தெரிவிக்கிறது. குணப்ப னேந்தல் எமனேஸ்வரம் அருகிலுள்ள ஓர் ஊர் ஆகும்.

**புதிய கல்வெட்டுகள்**

கோயிலின் தென்பகுதியில் தனியாக கிடக்கும் கருவறை அதிட்டானத்தில் இருந்த ஒரு கருங்கல்லில் கல்வெட்டுகள் இருந்தது சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது[5]. இக்கல் புதுப்பிக்கும் முன்பு இருந்த பழைய மல்லிகார்ஜுனேஸ்வரர் சன்னதியின் கருவறை அதிட்டானத்தில் இருந்த கல் எனலாம். இதில் முப்பட்டைக் குமுதத்தில் ஒன்றும், அதன் மேல்பகுதியின் கிழக்கில் ஒன்றுமாக இரு துண்டுக் கல்வெட்டுகள் உள்ளன. அதன் மேற்பகுதியின் மேற்கில் எழுத்துகள் இருந்து தேய்ந்துள்ளன.

இரண்டு கல்வெட்டு எழுத்துகளும் வெவ்வேறு அளவுகளில் உள்ளதால் இவை வெவ்வேறு கல்வெட்டுகளின் துண்டுகள் எனலாம். ஒரு கல்வெட்டில், கோயிலில் நடத்தப்படும் மூன்று திருநாளுக்கு இரண்டு வேலி நிலமும், மடப்புறமாக ஐந்து மா நிலமும், திருஞானம் ஓதும் ஆண்டாற்கு இருமாவரை நிலமும் தானமாக கொடுக்கப்பட்டுள்ளது. கோயிலில் ஓதும் தேவாரம் போன்ற பாடல்களை திருஞானம் என்பர். அவ்வாறான பாடல்களை ஓதும் ஆண்டார்க்கு நிலம் அளிக்கப் பட்டுள்ளது. வேலி, மா, மாவரை ஆகியன நில அளவுகள் ஆகும். கடமை, அந்தராயம், வெட்டிப்பாட்டம், பஞ்சுபீலி, சந்து விக்கிரகப் பேறு, செக்கிறை, தட்டொலிப் பாட்டம், இடையர்வரி, இனவாயம் போன்ற பாண்டியர் கால வரிகளின் பெயர்கள் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன.

தானமாக கொடுக்கப்பட்ட நிலத்துக்கு இவ்வரிகள் நீக்கப்பட்டுத் தானமாக கொடுத்திருப்பர். ஏற்கனவே கோயில்களுக்கு வழங்கப்பட்ட தேவதான நிலமும், புத்த, சமண சமய ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட பள்ளிச்சந்த நிலமும் நீக்கி உள்ள நிலம் தானமாக கொடுக்கப்பட்டதாக கல்வெட்டு தெரிவிக்கிறது. மடத்துக்கு மடப்புறமாக நிலம் கொடுக்கப்பட்டதன் மூலம் இக்கோயிலில் ஒரு மடம் இருந்திருப்பதை அறியமுடிகிறது. கல்வெட்டில் நில உரிமையைக் குறிக்கும் காராண்மை மியாட்சி போன்ற சொற்களும் வருகின்றன.

சிறிய அளவிலான எழுத்துகள் கொண்ட மற்றொரு கல்வெட்டில், அந்தராயம், விநியோகம் ஆகிய வரிகளின் பெயர்களும், கீழை நெட்டூரான கீர்த்தி விசாலைநல்லூரும் வருகிறது. கீழநெட்டூர் சிவகங்கை மாவட்டத்தில் உள்ளது. இவ்வூரில் ஒரு திருமால் கோயிலும், மேலநெட்டூரில் ஒரு சிவன் கோயிலும் உள்ளன. கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு இவை கி.பி.13ஆம் நூற்றாண்டை சேர்ந்தவை எனலாம்.

**பாண்டியர் கல்வெட்டுகள்**

இக்கோயிலில் மத்திய தொல்லியல் துறை பதிவு செய்த 3 கல்வெட்டுகள் மற்றும் புதிதாக கண்டறியப்பட்ட இரு துண்டுக்

கல்வெட்டுகள் என மொத்தம் 5 கல்வெட்டு கள் உள்ளன. இதில் ஒரு தும்பிச்சி நாயக்கர் கல்வெட்டைத் தவிர மற்றவை பாண்டியர் கல்வெட்டுகள் ஆகும். அம்மன் சன்னதியில் உள்ள முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு தான் கோயிலின் பழமையான கல்வெட்டு ஆகும். எனவே பாண்டியர் அடையாளமான சதுர வடிவ ஆவுடையுடன் மல்லிகார்ஜுனேஸ்வரர் மற்றும் அம்மன் சன்னதிகளும், துண்டுக் கல்வெட்டுகளும் அவர் காலத்தைச் சேர்ந்தவை என உறுதியாகக் கூறலாம். ஏனெனில் அம்மன் சன்னதி மட்டும் தனியாக அமைப்பதில்லை. மத்திய தொல்லியல் துறை இக்கோயிலில் பதிவு செய்துள்ள முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன் கல்வெட்டு தற்போது எங்கு உள்ளதெனத் தெரியவில்லை.

சிவன் கோயிலுக்கு அருகிலேயே உய்யவந் தம்மன் என்ற எட்டுக்கைகளுடன் அமர்ந்த நிலையிலான ஒரு காளி கோயில் உள்ளது. இது கமுதி அருகிலுள்ள பெருங்கருணை யில் உள்ள ஆயிரவல்லியம்மன் காளி போன்ற அமைப்பில் உள்ளது. பெருங் கருணையில் உள்ள சிவன் கோயிலும், ஆயிரவல்லியம்மன் கோயிலும் முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் கட்டப் பட்டவை. எனவே எமனேஸ்வரத்தில் உள்ள வட்டவடிவ ஆவுடை கொண்ட இயமனீஸ்வர முடையார் சன்னதியும், உய்யவந்தம்மன் கோயிலும் பிற்காலச் சோழர்களால் கட்டப் பட்டவையாகக் கருதலாம். பின்னர் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் மல்லிகார்ஜுனேஸ்வரர் சன்னதியும், அம்மன் சன்னதியும் உருவாக்கப் பட்டிருக்கலாம். தும்பிச்சி நாயக்கர் காலத்தில் இக்கோயில்கள் மராமத்து செய்யப் பட்டிருக்கலாம்.

**முடிவுரை**

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டில் குறிப்பிடப்படும் பெரியநங்கை தேவரடியாராக இருக்கலாம். முதலாம் மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் கல்வெட்டில் குறிப்பிடப்படும் கேரளசிங்க வளநாட்டு மட்டியூர் சிவபுரியைச் சேர்ந்த ஓமழகியான் நாராயணனான குறி உடைய பாண்டியத் தேவர் வணிகத்தோடு தொடர்பு டையவராக இருக்கலாம். கேரளசிங்க வளநாட்டுப்பகுதி நகரத்தார்கள் அதிகம் வசிக்கும் பகுதியாகும். பரமக்குடி பகுதியை ஆட்சி செய்த தும்பிச்சி நாயக்கரின் கி.பி.1567-ஆம் ஆண்டு கல்வெட்டில், மதுரை நகரத்தார் ஆற்றூருடையர் மெய்நின்றார் எங்குமான செட்டியார் குறிப்பிடப்படுகிறார். எமனேஸ்வரம், பழமையான ஒரு வணிக நகரமாக, குறிப்பாக துணி வணிகத்தில் சிறந்ததாக சோழர், பாண்டியர் காலம் முதல் இருந்துள்ளது. இதற்குக் காரணம் இப்பகுதி யில் அதிகமாக விளையும் பருத்தியாகும். கைக்கோளர் மற்றும் சௌராஷ்டிரா ஆகிய துணி வணிகர்கள் இப்போதும் அதிகளவில் இவ்வூரில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

**மேற்கோள்**

1. South Indian Inscriptions Vol. XXXIV -No.393
2. South Indian Inscriptions Vol. XXXIV -No.394
3. South Indian Inscriptions Vol. XXXIV -No.392
4. South Indian Inscriptions Vol. VIII -No.395
5. எமனேஸ்வரத்தில் 800 ஆண்டுகள் பழமையான கல்வெட்டு கண்டெடுப்பு சிவன் கோயில் ஆய்வில் தகவல்' தினமலர், மதுரை பதிப்பு, 30.04.2025